செ.வெ. எண்: 143 நாள்: 23–02–2012

# தேசிய கைத்தறி கண்காட்சியில் நெசவாளர் சேவை மையத்தின் பங்களிப்பு

சென்னை எழும்பூரில் உள்ள கோ–ஆப்டெக்ஸ் கைத்தறி கண்காட்சி திடலில் 10.2.2012 அன்று துவக்கப்பட்ட தேசிய கைத்தறி கண்காட்சி 2012, 5.3.2012 வரை தொடர்ந்து நடைபெற உள்ளது. இந்த கண்காட்சியில், நாளது தேதி வரை ரூ.113.00 இலட்சம் மதிப்பிற்கு காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள துணி இரகங்கள் விற்பனை ஆகியுள்ளன.

இந்த கண்காட்சியில், சுமார் 1500 சதுர அடி பரப்பளவில், கைத்தறியில் நெய்தல் மற்றும் அச்சடிப்பதற்கு ஏதுவாக வடிவமைப்பு உருவாக்குதல் போன்றவற்றை வருகை தரும் பார்வையாளர்களுக்கு விவரிக்கும் வகையில், மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள நெசவாளர் சேவை மையத்தின் சார்பாக, அழகுபடுத்தப்பட்ட கண்காட்சி விளக்கக் கூடம் அமைக்கப்பட்டிருப்பது இந்த கண்காட்சியின் சிறப்பு அம்சமாகும்.

கைத்தறி நெசவின் பழமையான திறன் மற்றும் பண்பாட்டு பாரம்பரியத்தை பாதுகாக்கவும், விசைத்தறி மற்றும் ஆலைகளின் போட்டியிலிருந்து கைத்தறித் தொழிலை காக்கவும், இந்திய அரசாங்கம் 1956 ஆம் ஆண்டு இந்த நெசவாளர் சேவை மையத்தைத் துவக்கியது.

கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான வடிவமைப்பு, அபிவிருத்தி, வடிவ மேம்பாடு, வடிவமைப்பின் உபயோகம் பற்றிய அறிவு, சாயத் தொழில் நுட்பம், தறி பற்றிய ஆராய்ச்சி ஆகிய உதவிகளை நெசவாளர்களுக்கு செய்வதையே தனது முக்கிய பணியாக இந்த நெசவாளர் சேவை மையம் செய்து வருவதுடன், பலதரப்பட்ட வடிவமைப்புகள், நெசவுத் தொழில் நுட்பம், உபகரணங்கள் ஆகியவற்றை சேகரித்து பிற்காலத்திற்காக பாதுகாத்து வருவதும் இந்த நெசவாளர் சேவை மையத்தின் சிறப்பம்சமாகும்.

இந்த மையமானது, உற்பத்தியாளர்கள் மற்றும் கைவினைஞர்கள் கருத்துப் பரிமாற்றத்திற்கு ஒரு பாலமாக இருந்து வருதோடு, தொழில் நுட்ப வல்லுநர்கள் மூலம் நெசவாளர்களுக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேவையான உதவிகளையும் செய்து வருகிறது.

இந்த கண்காட்சியில் தமிழ்நாடு, ஆந்திரா, அரியானா, பஞ்சாப், ராஜஸ்தான், ஒரிஸா, மேற்கு வங்காளம், ஜம்மு காஷ்மீர், உத்திர பிரதேசம், மத்திய பிரதேசம் கர்நாடகம், பாண்டிச்சேரி, குஜராத், புதுதில்லி மற்றும் அஸ்ஸாம் ஆகிய மாநிலங்களின் பிரசித்திப் பெற்ற கைத்தறி துணி வகைகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இந்த கண்காட்சிக்கு சுமார் 5 இலட்சம் மக்கள் வருகை புரிவார்கள் என்றும், இந்த கண்காட்சியின் மூலம் ரூ.5 கோடி அளவிற்கு கைத்தறி இரகங்கள் விற்பனை ஆகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

கோ–ஆப்டெக்ஸ்

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.